# தாத்தா-பாட்டிகள்: உறவுமுறைகளை வளர்த்தல்

## தாத்தா-பாட்டிகளுக்கு குடும்ப உறவுகள் ஏன் முக்கியம்

பேரக்குழந்தையின் வருகை உங்கள் பேரக்குழந்தையின் பெற்றோருடன் உங்களை நெருக்கமாக்கலாம். அவர்கள் நல்லவர்களாகவும் அக்கறையுள்ள பெற்றோர்களாகவும் மாறுவதைப் பார்க்கும்போது நீங்கள் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் உணரலாம்.

உங்கள் பேரக்குழந்தை உடனான உங்கள் உறவு உங்கள் இருவருக்குமே பலனளிப்பதாக இருக்கும், மேலும் அவரது வளர்ச்சியில் மிகவும் நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்தும். தாத்தா பாட்டிகளுடன் அன்பான உறவைக் கொண்ட குழந்தைகள் அதிக நெகிழ்திறனுடன் இருக்கிறார்கள், மேலும் அவர்கள் வாழ்க்கையின் ஏற்ற தாழ்வுகளின் போது சிறப்பாக மீளுந்திறன்களைக் கொண்டிருக்கலாம்.

இருந்தாலும், இந்த நேர்மறையான உறவுகளை வளர்ப்பதற்குச் சில நேரங்களில் அதிக நேரம் எடுக்கும், குறிப்பாக உங்கள் பேரக்குழந்தையின் பெற்றோருடனான உங்கள் உறவில் விரிசல் அல்லது சிக்கல் ஏற்பட்டிருந்தால்.

உங்கள் பேரக்குழந்தையின் பெற்றோருடன் உங்கள் உறவு எப்படி இருந்தாலும், மரியாதைக்குரியவராக இருப்பது, தேவைப்படும்போது ஆதரவளிப்பது, மேலும் தரமான நேரத்தை ஒன்றாகச் செலவிடுவது ஆகியவற்றின் மூலம் நீங்கள் உறவை வளர்த்துக் கொள்ளலாம். இது உங்கள் பேரக்குழந்தை, அவரது பெற்றோர் மற்றும் உங்களுக்குப் பயனளிக்கும்.

## உங்கள் பேரக்குழந்தையுடன் உங்கள் உறவை வளர்ப்பதற்கான உதவிக்குறிப்புகள்

உங்கள் பேரக்குழந்தையுடன் உறவை வளர்ப்பதற்கான சிறந்த வழி, உங்கள் நேரத்தை அவருடன் ஒன்றாகச் செலவிடுவதாகும். இங்கே சில உதவிக்குறிப்புகள் கொடுக்கப்பட்டுள்ளன:

- உங்கள் பேரக்குழந்தையிடம் அரவணைப்பையும் பாசத்தையும் காட்டுங்கள். பாசமாகப் பேசுவது, சிரிப்பது, கட்டியணைப்பது ஆகியவற்றின் மூலம் நீங்கள் இதைச் செய்யலாம்.

- உங்கள் பேரக்குழந்தையின் உணர்வுகளையும், அவர் எதில் ஆர்வமாக இருக்கிறார் என்பதையும் அறிந்து கொள்ளுங்கள். எடுத்துக்காட்டாக, அவர் பூங்காவில் இருப்பதற்கு உற்சாகமாகத் தெரிந்தால், நீங்களும் உற்சாகமாக இருப்பதாகத் தோற்றமளியுங்கள்.

- பொழுதுபோக்குகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள் - அவருடைய மற்றும் உங்களுடைய பொழுதுபோக்குகள் இரண்டையும். எடுத்துக்காட்டாக, பள்ளிக்குச் செல்லும் வயதுடைய உங்கள் பேரக்குழந்தை சமையல் செய்வதை விரும்பினால், நீங்கள் அவருடன் சில குடும்பச் சமையல் குறிப்புகளைப் பகிர்ந்து கொள்ளலாம், அவருடன் இணைந்து சமையல் செய்யலாம்.

- குடும்பக் கதைகள் மற்றும் நினைவுகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள் - எடுத்துக்காட்டாக, நீங்கள் அவரது வயதில் இருந்தபோது வாழ்க்கை எப்படி இருந்தது என்பதைப் பற்றி உங்கள் பேரக்குழந்தைக்குச் சொல்லுங்கள் அல்லது அவரது பெற்றோர் குழந்தையாக இருந்தபோது நடந்த நிகழ்ச்சிகளைப் பகிர்ந்து கொள்ளுங்கள். கடந்தகாலத்தில் நடந்தவற்றைப் பகிர்வது ஒரு குடும்பமாக உங்களை நெருங்கச் செய்யலாம், எனவே குடும்ப இரகசியங்களை அல்லது யாரையும் சங்கடப்படுத்தும் கதைகளைச் சொல்ல வேண்டாம்.

- உங்கள் வயதுவந்த பிள்ளையும் அவரது மனைவியும் பின்பற்ற விரும்பும் முக்கியக் குடும்ப மதிப்புகளை ஒப்புக் கொள்ளுங்கள், அவற்றை உங்கள் பேரக்குழந்தையுடன் பகிர்ந்து கொள்ளுங்கள் - எடுத்துக்காட்டாக, கண்ணியமாகவும் அக்கறையுடனும் இருப்பது, குடும்பத்தின் முக்கியத்துவம் மற்றும் பிறரின் கருத்துக்களை மதிப்பது.

- விலை அதிகமுள்ள அல்லது உடையக்கூடிய பொருட்களை பார்வையில் படாதவாறு அல்லது கைக்கு எட்டாதவாறு வைக்கவும். நீங்கள் பதற்றமில்லாமல் இருப்பதற்கும், உங்கள் பேரக்குழந்தையின் இருப்பை மகிழ்ச்சியுடன் அனுபவிக்கவும் இது உதவும்.

- உங்களுக்குப் பல பேரக்குழந்தைகள் இருந்தால், அவர்கள் அனைவரையும் தனிநபர்களாகக் கருதி அவர்களைச் சமமாக நடத்துங்கள். இது, ஒவ்வொருவரும் உங்களுக்குச் சிறப்பானவராக நீங்கள் உணர உதவுகிறது.

உங்கள் பேரக்குழந்தையுடன் உறவை வளர்த்துக் கொள்ள உங்கள் வாழ்க்கைத்துணைக்கும் வாய்ப்பு கிடைப்பதை உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள் - குறிப்பாக நீங்கள் அதிக ஈடுபாடு கொண்ட தாத்தா-பாட்டி என்றால். எடுத்துக்காட்டாக, உங்கள் பேரக்குழந்தை விரும்பும் விளையாட்டின் விதிகளை உங்கள் மனைவிக்கு நீங்கள் சொல்லிக் கொடுக்கலாம் அல்லது உங்கள் பேரக்குழந்தையை ஒரு பயணத்திற்கு அல்லது நண்பர்களுடனான சந்திப்புக்கு அழைத்துச் செல்ல உங்கள் வாழ்க்கைத்துணையை ஊக்குவிக்கலாம்.

உங்கள் பேரக்குழந்தை பெரியவராகும்போது, அவரது ஆர்வங்கள் விரிவடையும் என்பதால், அவருக்கு உங்களுடன் நேரம் செலவிடுவதில் உற்சாகம் குறைவதாக உங்களுக்குத் தோன்றலாம். உங்கள் உறவைப் பேணிப் பராமரிப்பதற்கான சில யோசனைகள்:

- ஸ்மார்ட்ஃபோனை எவ்வாறு பயன்படுத்துவது அல்லது சமூக ஊடகத்தை எவ்வாறு பின்பற்றுவது என்று உங்கள் பேரக்குழந்தையிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். அதோடு, அவர்களுடன் ஒரு நடவடிக்கையைப் பகிர்ந்துகொள்ளுங்கள். நீங்கள் அவர்களுடன் தொடர்பில் இருக்க இது உதவும்.

- உங்கள் பேரக்குழந்தை மேலும் தற்சார்புடையவராக மாறுவதால், அவர் கூறுவதைக் காதுகொடுத்துக் கேளுங்கள். அவர் யார், அவர் என்னவாக இருக்க விரும்புகிறார் என்பதைப் பொறுத்தவரை நீங்கள் அவருக்கு வெவ்வேறு கண்ணோட்டங்களைக் கொடுக்க முடியும்.

- உங்கள் பேரக்குழந்தையின் பெற்றோரிடம் உதவி கேளுங்கள். எடுத்துக்காட்டாக, வரவிருக்கும் பள்ளி இசை நிகழ்ச்சிகள் அல்லது விளையாட்டு நிகழ்வுகள் பற்றி அல்லது உங்கள் பேரக்குழந்தைகளின் ஆர்வங்களைப் பற்றி அவர்கள் உங்களுக்குத் தெரியப்படுத்தலாம்.

## உங்கள் பேரக்குழந்தையின் பெற்றோருடன் உங்கள் உறவை வளர்ப்பதற்கான உதவிக்குறிப்புகள்

உங்கள் பேரக்குழந்தையின் பெற்றோருடன் உங்கள் உறவை வளர்ப்பதற்கான சில யோசனைகள்:

- உங்கள் பேரக்குழந்தையின் பெற்றோர்கள் சிறந்த பெற்றோர்களாக விளங்குகிறார்கள் என்று நீங்கள் நினைக்கும் போது அவர்களுக்குத் தெரியப்படுத்துங்கள் - பெரும்பாலான மக்கள் புகழ்ச்சியை விரும்புகிறார்கள்!

- பூங்காவில் நடப்பது அல்லது திரைப்படம் பார்ப்பது போன்ற நீங்கள் ரசிக்கும் விஷயங்களில் ஒன்றாகச் செலவிடுங்கள்.

- உங்கள் பேரக்குழந்தையின் குடும்பத்தினருடன் ஒன்றாக அமர்ந்து உணவு உண்ணுங்கள். குறிப்பாக நீங்கள் அருகாமையில் வசிக்கிறீர்கள் என்றால் இது சுலபமாகும். வாரநாட்களின் போது உங்கள் பேரக்குழந்தை உங்களுடன் வாழ்ந்தால், உறவை வளர்த்துக்கொள்ள இது ஒரு சிறந்த வழியாகும்.

- தேவைப்படும்போது ஆதரவளியுங்கள். நீங்கள் உணவைச் சமைக்கவோ அல்லது ஒரு வேலையைச் செய்யவோ முன்வரலாம் அல்லது அவர்களைப் பெற்றோர்களாக ஊக்குவிக்கலாம். ஆலோசனை சில நேரங்களில் உதவியாக இருக்கும், ஆனால் உங்கள் ஆலோசனை அல்லது கருத்தை வழங்குவதற்கு முன்னர் அனுமதி கேட்பது நல்லது.

உங்கள் பேரக்குழந்தையின் பெற்றோருக்கு அவர்கள் எந்த வகையான பெற்றோர்களாக இருக்க விரும்புகிறார்கள் என்பதை யோசிப்பதற்குத் தேவையான கால அவகாசம் கொடுங்கள். அனைவரும் ஒற்றுமையாக இருக்க உதவுவதற்கான சில யோசனைகள்:

- ஒரு குடும்பமாக உங்கள் அனைவருக்கும் முக்கியமானது என்ன என்பதை ஒப்புக்கொள்ள முயற்சி செய்யுங்கள் - எடுத்துக்காட்டாக, நீங்கள் ஒருவருக்கொருவர் மரியாதையுடன் நடந்துகொள்வீர்கள்,

அல்லது நீங்கள் எப்போதும் சிறப்புத் தருணங்களை ஒன்றாகச் சேர்ந்து கொண்டாடுவீர்கள். வாழ்க்கை பரபரப்பாக இருக்கும்போது நீங்கள் இந்த மதிப்புகளைக் குறிப்பிடலாம் - எடுத்துக்காட்டாக, 'சனிக்கிழமையன்று ஸி வெய்-இன் வகுப்புகளுக்குப் பிறகு ஒன்றுகூட முயற்சிப்போம். நினைவில் கொள்ளுங்கள் - இது நம் குடும்பத்திற்கு ஒரு சிறப்பு நாளாகும்'.

- உங்கள் பேரக்குழந்தையின் பெற்றோருடைய மதிப்புகளுக்கு மதிப்பளிக்கவும், குறிப்பாக உங்கள் பிள்ளை வேறு பின்னணி அல்லது கலாச்சாரத்தைச் சேர்ந்த ஒருவரை மணந்திருந்தால். இது உங்கள் பேரக்குழந்தையின் பெற்றோருடனான உங்கள் உறவுக்கு மட்டும் சிறந்ததல்ல. இது உங்கள் பேரக்குழந்தைக்குச் சமூகத்தில் பெருமை உணர்வையும் சமூகத்திற்கு உரியவர் என்ற உணர்வையும் வளர்க்க உதவுகிறது, இது அவரது வளர்ச்சிக்கு நல்லது.

- உங்கள் பேரக்குழந்தையை அவரது பெற்றோர் ஒழுங்குபடுத்தும்போது தலையிடுவதைத் தவிர்க்கவும். எப்படி நடந்துகொள்வது என்பது குறித்த நிலையான செய்திகளிலிருந்து குழந்தைகள் பயனடைவார்கள். உங்கள் பேரக்குழந்தையின் பெற்றோர் பயன்படுத்துவதற்குத் தேர்ந்தெடுத்த நடத்தை மூலோபாயத்தை நீங்கள் தடுக்க முயன்றால், உங்கள் பேரக்குழந்தை தனது நடத்தை சரியானது என்று நினைக்கலாம். உங்களுக்கு மாற்றுக் கருத்து இருந்தால், உங்கள் பேரக்குழந்தை இல்லாதபோது அதை உங்கள் பேரக்குழந்தையின் பெற்றோருடன் கலந்துரையாடுங்கள்.

- உங்கள் பிள்ளைகள் இளையர்களாக இருந்தபோது செய்யப்பட்டதைவிட வித்தியாசமாக உங்கள் பேரக்குழந்தையின் பெற்றோர் சில விஷயங்களைச் செய்யலாம் என்பதை ஏற்றுக்கொள்ளுங்கள். அவர்களின் குழந்தைவளர்ப்பு அணுகுமுறையானது,

  அவர்களின் குடும்பச் சூழ்நிலை மற்றும் அவர்கள் குழந்தையின் மனோபாவங்கள் மற்றும் தேவைகளின் அடிப்படையில் இருக்கும். இது உங்கள் சொந்த அணுகுமுறையிலிருந்து வேறுபட்டிருக்கலாம்.